Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, COURT, ANNUR

Case No.C.C.No. 86 /2025

Deposition of witness for Prosecution P.W. 1 Date : 04.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | கருணாகரன் | Village : | அன்னூர் |
| Father's Name : | கந்தசாமி | Taluk : | அன்னூர் |
| Age : | 35 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04st day of March 2026 **(1st Accused present. 2nd Accused absent, petition under sec 355 BNSS filed and allowed.)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது அன்னூர் காவல் நிலைய தனிப்பிரிவில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் அன்னூர் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக சட்ட ஒழுங்கு பிரிவில் பணிபுரிந்து வந்தபோது, கடந்த 13.12.2023–ம் தேதி சுமார் மாலை 4.00 மணியளவில் நானும், காவலர் குருசாமியும், காவல் ஆய்வாளர் திருமதி. நித்யாவுடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குப்பேபாளையம் – காரமடை சாலையில் உள்ள எழில் ரெஸ்டாரண்டிற்கு ரோந்து சென்றோம். அங்கு இரண்டு நபர்கள் சந்தேகப்படும் வகையில் நின்று கொண்டிருந்தவர்களை பார்த்து ஆய்வாளர் அவர்களை அழைத்து விசாரித்தார். அந்த விசாரணையில் ரெஸ்டாரண்டில் குறைந்த அளவிலான மதுபாட்டில்களும், சிறிது தூரம் தள்ளியுள்ள ஒரு தோட்டத்தில் இருந்த ஒரு அறையில் நிறைய மதுபாட்டில்களும், மேற்கண்ட எழில் உணவு விடுதியில் விற்பனை செய்ய வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார்கள். அவர்களின் வாக்குமூலத்தின் அடிப்படையில் ஆய்வாளரும், காவலர் குருசாமியும், நானும் அந்த இரண்டு இடத்திலுள்ள மதுபாட்டில்களை கைப்பற்றினோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1–ம் கையொப்பம் என்னுடையதுதான். என் முன்னிலையில் சுமார் 730 மது பாட்டில்களுக்கு மேலாக கைப்பற்றியதாக ஞாபகம். (**மேற்கண்ட பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் அ.சா.1 ஆக குறியீடு செய்யயப்படுகிறது.**) பின்னர் ஆய்வாளர் அவர்களை விசாரித்து, கைது செய்து, நிலையம் அழைத்து வந்து எதிரிகளையும், கைப்பற்றிய வழக்கு சொத்துக்களையும் நீதிமன்ற காவலுக்காக ஆய்வாளர் அனுப்பி வைத்தார். இந்நீதிமன்றத்தில் இன்று முன்னிலையாகியுள்ள எதிரி மேற்கண்ட எதிரிகளில் ஒருவர். இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தற்போது நான் கூறிய சாட்சியத்தைதான் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது வாக்குமூலமாக அளித்திருந்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் பற்றிய தகவல் கிடைக்கப்பெற்றதும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியும் காவல் ஆய்வாளர் என்று சொன்னால் சரிதான். குப்பேபாளையம் – காரமடை ரோட்டில் எழில் ரெஸ்டாரண்ட் இல்லை என்றால் தவறு. எழில் ரெஸ்டாரண்ட் எங்கள் காவல் நிலையத்திலிருந்து சுமார் 12 கிமீ தொலையில் உள்ளது. இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் என் முன்னிலையில் தயார் செய்யவில்ல என்றால் தவறு. என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் தவறு. இவ்வழக்கின் கைப்பற்றுதல் மகஜரை யார் எழுதியது என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் சொன்ன நாள் , நேரம் மற்றும் தேதியில் 1–ம் எதிரியிடம் இருந்து வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் தவறு. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்க்காக காவல் நிலையத்தில் வைத்து இவ்வழக்கின் ஆவணங்கள் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. 2ம் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் தவறு.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur